# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

## S.C.No.95/2022

**Deposition of Witness for : P.W.6**

**Name : திரு.சங்கர்**

**Father's Name : அண்ணாமலை**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 8.11.2023.**

முதல் விசாரணை -

நான் விளை கிராமத்தில் வசிக்கிறேன். விசைத்தறி வேலை செய்து வருகிறேன். குணசேகரன் என்னுடைய அண்ணன். புருஷோத்தமனை தெரியும். ஆஜர் எதிரியும் தெரியும். என்னுடைய உறவினர்கள் தான். புருஷோத்தமன் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக

எனக்கு என்ன தெரியும் என்றால் ஊர் ஜனங்கள் எல்லாம் போய் வெள்ளை வீட்டிடம் போய் பார்த்தோம். நான் போய் பார்த்தபோது புருஷோத்தமன் கீழே விழுந்துகிடந்தார். அவரை ஆம்புலன்சில் அனுப்பி வைத்ததை பார்த்தேன்.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

புருஷோத்தமன், ராஜசேகர் மற்றும் ரமேஷ் ஆகியோர்களுக்கு வீடு சம்பந்தமாக பிரச்சனை என்றால் எனக்கு எதுவும் தெரியாது. இரவு எத்தனை மணிக்கு போய் பார்த்தேன் என்றால் நேரம் ஞாபகம் இல்லை. எங்கெங்கு அடிப்பட்டு இருந்தது என்றால், கை, கால்களில் எரிந்த காயங்களை பார்த்தேன். எரிந்த காயங்கள் எப்படி ஏற்பட்டது என்றால் நான் பார்க்கவில்லை. யாரிடமாவது கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் தன்னாலேயே ஏற்படுத்திக்கொண்டதாக சொன்னார்கள். சாட்சி தானாகவே ஆஜர் எதிரி அன்றைய தினம் ஊரிலேயே இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார்.

தன்னாலேயே எரிந்துக்கொண்டது குறித்து யார் சொன்னார்கள் என்றால் குறிப்பாக சொல்ல முடியாது. ஊரில் பலபேர் சொன்னதால் தான். போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தபோது வாக்குமூலத்தில் உள்ளவாறு வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எதிரியை காப்பாற்றவேண்டி பரிதாபத்தின் மேல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எடுத்துரைக்கப்பட்டது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.